தினக்குரல்
THINAKKURAL
# புதுவசந்தம்
10-09-1997

**சிந்தனைக்கு**

ஒவ்வொரு மனிதப்பிறவியிலும் நான் கடவுளைக் காண்கின்றேன். ஒரு குஷ்டரோகியின் புண்களை கழுவித்துடைக்கும்போது நான் கடவுளை பராமரிப்பதாக உணருகின்றேன். இது ஒரு மகத்தான அனுபவமில்லையா?

-அன்னை தெரேசா

## டயானா மரணவிசாரணை தாமதமடையும்

# பல மாதங்களின் பின்னரே விபத்தின் காரணம் புலப்படும்

பாரிஸ்,

வேல்ஸ் இளவரசி டயானாவின் மரணத்துக்கு பத்திரிகைப் புகைப்படப்பிடிப்பாளர்களும் மதுபானமும் அல்லது வாகனத்தின் அதிவேகமும் எந்தளவு தூரத்துக்குக் காரணம் என்பதை பிரெஞ்சு விசாரணைகள் தீர்மானிப்பதற்கு பல மாதங்கள் அல்லது வருடங்கள் எடுக்கலாம் என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இளவரசி டயானா தனது கோடீஸ்வர காதலன் டொடி அல்பாயிட் உடன் பாரிசில் காரில் பயணம் செய்கையில் விபத்தில் சிக்கி மரணமானது தொடர்பான விசாரணைகளின் இலக்குகளாக 9 புகைப்படப் பிடிப்பாளர்களும் ஒரு புகைப்பட நிறுவனத்துக்காகப் பணி புரியும் மோட்டார் சைக்கிளோட்டியுமே விளங்குகிறார்கள்.

இந்த விசாரணைகள் முடிவடைய பல மாதங்கள் செல்லும் என்று புகைப்படப் பிடிப்பாளர்களின் நலனைக் கவனிக்கும் மெக்ஸ் கொப்லின்ஸ் என்ற சட்டத்தரணி தெரிவித்தார்.

சிக்கலான பிரெஞ்சுச் சட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இந்த விசாரணைகள் வருடக்கணக்கில் நீடிக்க முடியும் என்று வேறு சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.


ஒரு கார் விபத்து இந்தளவு சிக்கலான ஆழமான விசாரணைகளின் இலக்காக ஒருபோதும் இருந்ததில்லை என்று பிரெஞ்சு வார சஞ்சிகையான ஜேர்னல் டு டிமாஞ்சே ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருக்கிறது.

விபத்தில் சிக்கியோரை காப்பாற்றுவதற்கு தவறினர் என்ற சந்தேகத்தின் பேரிலும் 10 பேர் மீது விசாரணை நடைபெறுகிறது. விபத்து நடைபெற்ற உடனடியாக மீட்புப் பணியாளர்களை தாங்கள் அழைத்ததாக புகைப்படப் பிடிப்பாளர்கள் கூறுவதை மோபைல் போன் பதிவுகள் இதுவரை நிரூபிப்பதாக இல்லை என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

டயானாவுடனும், டொடியுடனும் விபத்தில் பலியான சாரதி ஹென்றி போலின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை நடைபெறுகிறதெனினும் அவர் காரை ஓட்டுவதற்கு முன்னதாக ஒரு சாரதி உட்கொள்ளக்கூடிய மதுபான அளவுக்கு மேலாக 3 தடவைகள் கூடுதலாகக் குடித்திருந்தார் என்று இரத்தப் பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டதாக கூறப்படுவதை அவரின் குடும்பத்தினர் ஏற்க மறுத்ததையடுத்து இறுதிக்கிரியை ரத்து செய்யப்பட்டது.

டயானாவும் டொடியும் இறுதியாகத் தங்கி இருந்த ரிட்ஸ் ஹோட்டலில் பணிபுரியும் போல் காரை ஓட்டுவதற்கு முன்னதாக வெகு நிதான

(III ஆம் பக்கம் பார்க்க)



கடந்த மார்ச் மாதம் கல்கத்தாவில் உள்ள அன்னை தெரேசாவின் சேவாச்சிரமத்தில் எடுக்கப்பட்ட படம் இது. அன்னை தெரேசா கடுமையான சுவீனமுற்றிருந்ததையடுத்து சேவாச்சிரமங்களின் தலைமையக தலைவியாக பணியாற்றுவதற்கு அருட் சகோதரி நிர்மலா தெரிவு செய்யப்பட்டிருந்தார். சகோதரி நிர்மலாவுக்கு அன்னை தெரேசா ஆசி வழங்கியதை படத்தில் காணலாம்.

**விக்கியின் விமர்சனம்**




அன்னை தெரேசாவின் மறைவால் தாமும் அநாதை போல் ஆகிவிட்டதாக குஜ்ரால் கூறுகிறார் அத்துடன் அடுத்த பொதுத்தேர்தலுக்குப் பின், தான் அரசியல் அநாதையாகிவிடுவேன் என்றும் பயப்படுகிறாரோ என்னவோ!

10-09-1997

- புதன் தினக்குரலின் இலவச இணைப்பிதழ் இது -

# அரசியல் அலைகள்

பாரதி

## ரணில் விதித்துள்ள புதிய நிபந்தனை!



அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை பாராளு மன்றத்தில் முன்வைப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ள அதே வேளையில், ஒரு பலப்பரீட்சைக்குத் தயாராகி வரும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் அதற்கான அரசியல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன.

பட்ஜெட்டுக்கு முன்னர் புதிய வரைபு பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கடந்தவாரம் மீண்டும் ஒருமுறை உறுதிபடக் கூறியிருந்தார். சர்ச்சைக்குரிய பல விவகாரங்கள் தீர்க்கப்படாதுள்ள இன்றைய நிலையில் அமைச்சர் பீரிஸின் இந்த அறிவிப்பு பல கேள்விக் குறிகளை எழுப்பியுள்ளது.

இதேவேளையில் அரசுக்கு எதிரான அணி ஒன்றும் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கு முற்பட்டுள்ளது. சில எதிர்க்கட்சிகளும் பொதுஜன முன்னணி அரசியல் பங்காளிக் கட்சிகளாக உள்ள சில அமைப்புக்களுமே புதிய போராட்டங்களை முடுக்கிவிடுவதற்காகத் திட்டமிட்டுள்ளன.

அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அதேவேளையில், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு மற்றும் சுதந்திரமானதும் நியாயமுமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தே இந்தப் போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வகையில் முதலாவது கூட்டம் எதிர் வரும் 17ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி இந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல கட்சிகளுக்கும் இவ்வமைப்பு அழைப்பு விடுத்திருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டம், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு ஆகிய விடயங்களையிட்டு மட்டுமன்றி, சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகவும் இதில் ஆராயப்படவுள்ளது. சிங்கள - பௌத்த தேசியவாதத்தை முன்னெடுத்து அரசுக்குச் சங்கடத்தைக் கொடுப்பது தான் இவர்களின் பிரதான நோக்கமாக இருக்கும் என்பது தெரிகின்றது.

இந்த வகையில் மஹாஜன எக்ஷத் பெரமுன (எம்.ஈ.பி.), ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) ஆகியன இதற்கு தம்முடைய முழுமையான ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

எம்.ஈ.பி. அமைப்பின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கட்சியின் 17வது வருடாந்த மாநாட்டில் அண்மையில் உரையாற்றும் போது, நாட்டின் ஒற்றையாட்சி முறையைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார்.

ஸ்ரீமணி அத்துலத்முதலி தலைமையிலான ஜ.ஐ.தே.மு. லலித் பிரிவும் அரசின் பொதியை எதிர்க்கின்றது. எதிர்ப்பு நடவடிக்கைகளில் அக் கட்சியும் குதிக்கும் எனத் தெரிகிறது!

அரசியல் சூழ்நிலைகள் இவ்வாறுள்ள நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி என்ன செய்யப்போகின்றது?



கண்டியில் கடந்தவாரம் நடைபெற்ற ஐ.தே.க. வின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைத்தல் உட்பட நகல் திட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதற்கு அரசு முன்வந்தால் அதனை ஆதரிக்க ஐ.தே.க. முன்வரும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். அரசியலமைப்பு மாற்றத்துடன் இதனையும் உள்ளடக்க வேண்டும் என்பதுதான் ஐ.தே.க.வின் கோரிக்கையாகும். அதற்கு அரசு இணங்கினால் அதற்கு வேண்டிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற ஐ.தே.க.உதவத் தயார் என்பதுதான் ரணில் கூறிய விடயம்!

ரணிலின் இந்த நிலைப்பாட்டை கூட்டத்தில் கலந்துகொண்ட 5,00,000 உறுப்பினர்களும் கரகோஷம் செய்து வரவேற்றார்கள்.

இது அரசுக்கு வைக்கப்படும் ஒரு 'பொறி' என்பதே வெளிப்படையான உண்மை. பொ.ஐ.மு.அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றியமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், அதனைச் செய்வதற்கு அரசாங்கம் இப்போது தயாராக இல்லை.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில், ஆளும் கூட்டணியிலுள்ள சில கட்சிகளே அரசுக்கு எதிராக திரும்பியுள்ள நிலையில், அரசுக்குள்ள ஒரே ஒரு பலம், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைதான்!

இன்றைய நிலையில் அதனை மாற்றியமைக்க அரசாங்கம் துணியாது என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்!

இவை அனைத்தும் ஏட்டிக்குப் போட்டியான அரசியல் நடவடிக்கைகளும், பிடிகொடுக்காத அரசியல் தந்திரங்களும் தீவிரமடைந்துள்ளமையையே வெளிப்படுத்துகின்றது. தீர்வுக்கான சாத்தியக் கூறுகளை கானல் நீராகக் கூட காண முடியவில்லை!

## கொலைப்பயமுறுத்தல்!

நாட்டுத்தலைவர்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு மட்டும் தான் இதுவரை காலமும் கொலைப் பயமுறுத்தல்கள் வந்து கொண்டிருந்தன.

இந்தக் கொலைப் பயமுறுத்தல் பின்னர் பணக்காரர்களையும் விட்டுவைத்ததாக இல்லை.

அநாமதேயக் கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மூலம் இந்த கொலை அச்சுறுத்தல்கள் உலகளாவிய மட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் தலைவர்கள், பணக்காரர்களுக்குப் பின்னர் மதத்தலைவர்களையும் இது விட்டு வைக்கவில்லை.

இவையெல்லாம் பழையகதை! இன்று புதிதாக உருவெடுத்திருப்பது சினிமாத்துறையில் கொலைப்பயமுறுத்தல்.


பம்பாயின் தலைசிறந்த நடிகர் திலீப்குமாருக்கு சமீப காலமாக தொலைபேசிமூலம் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறதாம். இது தொடர்பாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து நடிகர் திலீப்குமாருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. (VII ஆம் பக்கம் பார்க்க)

-எம்.ஏ.எம்.நிலாம்-



படப்பிடிப்புக்கு பாதுகாப்பு அதிகாரிகளுடன் செல்கிறார் திலீப்குமார்



# பிரேமானந்தா வழக்கைத் தொடர்ந்து மற்றொரு பரபரப்பான தீர்ப்பு!

தமிழ்நாட்டில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் அண்மைக் காலமாக வலுப்பெற்றிருக்கின்றன.

மகளிர் எழுச்சி அமைப்புகளின் ஓயாத போராட்டங்கள் தமிழ்நாடு ஆட்சியாளர்களை மட்டுமன்றி நீதிமன்றங்களையும் விழிப்படையச் செய்திருக்கின்றன என்பதே உண்மை!

பாலியல் குற்றவாளிகள் மீது நீதிமன்றங்கள் அண்மைக் காலமாக அளித்து வரும் கடுமையான தீர்ப்புகள் பெண்களின் சமூகப் பாதுகா



பொலிஸ் நிலையத்தில் மானபங்கப்படுத்தப்பட்ட பத்மினி

ப்பை ஒருபடி உறுதிப்படுத்தியிருக்கின்றன.

இந்தியாவில் பாலியல் வன்முறைகளும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் கூடுதலாக மும்பை, கேரளா போன்ற இடங்களிலேயே இடம்பெறுவதுண்டு.

அந்தப் பிரதேசங்களில் கட்டுப்பாடுகளும் சட்ட நடவடிக்கைகளும் மிகவும் வலுவிழந்து விட்டது. கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டிலும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பெருகியிருந்தன. இன்று சட்டம் விழிப்படைந்திருக்கிறது.

இதன் ஒரு படிதான் பிரேமானந்தா விவகாரம்!

திருச்சியில் ஆச்சிரமம் அமைத்து சமயத் தொண்டுகளையும் சேவைகளையும் செய்வது போல மக்கள் முன்னிலையில் பாசாங்கு செய்து பல பெண்களைத் தனது ஆச்சிரமத்திற்குள் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த பிரேமானந்தாவுக்கு கிடைத்த தண்டனை பெண்கள் இயக்கங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றுதான் கூறவேண்டும்.

தொடர்ச்சியான மகளிரின் ஆர்ப்பாட்டத்தினால் குற்றங்களை மூடிமறைக்க முடியாமல் போனது. பிரேமானந்தா சட்டத்தின் முன்னிலையில் நிறுத்தப்பட்டு முறையாகவும் நீதியாகவும் விசாரணை செய்யப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதுபோன்ற பாலியன் வன்முறைகளினால் மகளிர் அமைப்புகள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

தமிழ் நாடு அரசும், காவல் துறையினரும் பாலியல் வன்முறைக் கெதிராக தீவிரமாக ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுவிட்டது.

## மகளிர் அமைப்புகளுக்கு கிடைத்த அடுத்த வெற்றி

பிரேமானந்தா தீர்ப்பைத் தொடர்ந்து தமிழகத்தில் நடைபெற்ற மற்றொரு தீர்ப்பு பாலியல் வன்முறைக்கெதிரான போராட்டத்தின் முன்னேற்றத்தினை வெளிப்படுத்துகின்றது.

தமிழ்நாடு சிதம்பரத்தை சேர்ந்த அண்ணாமலை வாசியான நந்தகோபால் என்பவர் கூலித் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அவரை ஒரு திருட்டுச் சம்பவம் காரணமாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைத்திருந்தனர்.

ஆனால் அவர் அன்றிரவு தற்கொலை செய்து கொண்டார். இதனையறியாத அவரது மனைவி அன்றிரவு பொலிஸ் நிலையத்துக்கு கணவருக்கு உணவு எடுத்துச் சென்ற வேளையில் அங்கு கடமையில் இருந்த பொலிஸாரினால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டார்.

இப்பெண்ணை பாலியல் பலவந்தத்திற்கு உட்படுத்தியதற்காகவும் இவரது கணவரை தகுந்த ஆதாரம் இன்றி கைது செய்தமைக்காகவும் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் உட்பட 9 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் நடைபெற்றது. குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டபோது 37 சாட்சிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

விசாரணையின் முடிவில் சப் இன்ஸ்பெக்டருக்கு சட்ட விரோதமாக நந்தகோபாலை அடைத்து வைத்திருந்தமைக்காக 3 ஆண்டு சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் அபராதமும் மற்றும் பாலியல் வன்முறை, மானபங்கம் போன்ற குற்றங்களில் ஈடுபட்ட ஏனையோருக்கு 10 ஆண்டு காலச் சிறையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நடந்தபோதும் தீர்ப்பு வழங்கப்பட்ட போதும் ஏராளமான பத்திரிகையாளர்களும் புகைப்படப்பிடிப்பாளர்களும் நீதிமன்ற வளவினுள் கூடியிருந்தனர். ஆனால் குற்றவாளிகளின் உறவினர்களும் பொலிஸாரும் புகைப்படம் எடுப்பதனைத் தடுத்தனர்.



நீதிம... ிருந்து சிறை... தாண்டு செல்லப்... பொலிசார் ...ரின் முகங்க

மறைத்தனர். செய்தியாளர்களும் புகைப்படப்பிடிப்பாளர்களும் தாக்கப்பட்டனர். இவ்வாறு தாக்கப்பட்ட அனைவரும் ஒன்று கூடி மாவட்ட பொலிஸ்துறை கண்காணிப்பாளருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். அவர் இதுகுறித்து பூரண விசாரணை மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பதாகவும். உரியவர்கள் உரிய நேரத்தில் சாட்சியமளிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

பாலியல் வன்முறை துஷ்பிரயோகங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தமிழகத்தில் தீவிரமடைந்திருப்பதையே இச் சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

-பாபு-

# மூலிகைப் பெற்றோல் முயற்சியை கைவிடப் போவதில்லை



தமிழ் நாட்டைச் சேர்ந்த ராமரின் 'மூலிகைப் பெற்றோல்' பரபரப்பு என்றோ பிசுபிசுத்துப் போன விவகாரம்!

ஆனால் ராமர் இன்னும் விடுவதாக இல்லை.

ஒரு மணி நேரத்தில் 80 லீட்டர் செயற்கைப் பெற்றோல் தயாரிக்கப் போவதாக கூறும் ராமர் சென்னையில் ஆலை ஒன்றை நிறுவும் பணியில் இப்போது மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்.

சென்னையில் தனது குடும்பத்தினருடன் வாடகை வீட்டில் தங்கியிருக்கிறார் ராமர். செயற்கைப் பெற்றோல் தயாரிக்கவென கொதிகலன்கள் கொண்ட தானியங்கி இயந்திரத்தைத் தயார் செய்யக் கொடுத்திருக்கிறார் அவர்.

மூலிகைப்பெற்றோல் விவகாரம் உண்மை தானா என்பதை அறிய இன்னும்தான் பலர் காத்திருக்கிறார்கள்.

ராமரின் மேற்பார்வையில் தயாராகும் இயந்திரத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா செலவாகிறது. இயந்திரம் தயாரானவுடன் தண்ணீர் வசதி கொண்ட இடத்தில் ஆலை அமைப்பது அவரது திட்டம்.

தமிழ்நாட்டின் ராஜபாளையம் அருகே இடையன் குளத்தைச் சேர்ந்த ராமர், தண்ணீரையும் மூலிகையையும் கொண்டு பெற்றோல் தயாரிக்க முடியுமென்று இன்றுவரை அடித்துக்கூறி வருகிறார்.

கடந்த வருடம் நவம்பரில் இந்திய பெற்

## ஒரு மணி நேரத்தில் 80 லீட்டர் பெற்றோல் ராமரின் முயற்சி பலிக்குமா?

றோலிய நிறுவன விஞ்ஞானிகள் முன்னிலையில் ராமர் செயற்கைப் பெற்றோல் தயாரித்துக் காட்டினார்.

'ராமர் செய்த சோதனையில் வெளிவந்த திரவத்தில் மண்ணெண்ணெய்க்குரிய வெப்பநிலை அளவில் கற்பூரம் கலந்த ஹைட்ரோ கார்பன்கள். (எரிபொருள்) உள்ளன' என்று விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

''நான் கற்பூரம் கலந்ததாகச் சொல்வது தவறு. தண்ணீருடன் நான் கலக்கும் மூலிகை உட்பட ஏனைய பொருட்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக தனித்தனியே வேண்டுமானால் எரித்துப் பார்க்கலாம். அவை எரியாது.

மூலிகைப் பெற்றோல் தயாரிப்பதை நிருபிக்கும்வரை ஸ்ரீவில்லிபுத்தூரில்மூலிகை பயிரிட அரசு இலவசமாக அளித்த 20 ஏக்கர் நிலத்தை ஏற்கமாட்டேன். சென்னையில் நீதிபதிகள், விஞ்ஞானிகள், நிருபர்கள் முன்னிலையில் மீண்டும் இதனை சோதனை செய்து காண்பிக்க உள்ளேன்''

இவ்வாறு கூறுகிறார் ராமர்.

### [illegible]... (1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மாகவே நடந்து சென்றதைக் காண்பிக்கும் வீடியோ கசெட்டுகளை ஹோட்டல் நிருவாகம் வெளியிட்டிருக்கிறது. விபத்துக்குள்ளான காரை உடனடியாகவே சூழ்ந்து கொண்டு புகைப்படப்பிடிப்பாளர்கள் படம் எடுத்ததை தாங்கள் கண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த உடனடியாக டயானாவின் காரின் கதவைத் திறந்ததை ஒரு புகைப்படப்பிடிப்பாளர் ஒத்துக் கொண்டுள்ளார். ஆனால் புகைப்படம் எடுப்பதற்காக அல்ல டயானாவின் நாடித்துடிப்பை பார்க்கவே தான் கதவைத் திறந்ததாக தெரிவித்திருக்கிறார்.

(ராய்ட்டர்)




இலங்கையும் விளையாட்டுத் துறையில் துரித வளர்ச்சி அடைந்து வரும் ஒரு நாடாக மாறி வருவதாக உலக நாடுகள் இன்று அபிப்பிராயம் கொள்கின்றன.

இன்று தெற்காசிய நாடுகளில் விளையாட்டுத் துறையில் முன்னணி வகிக்கும் நாடு இலங்கை தான் என்று துணிந்து கூறலாம்.

**கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பது வெற்றியின் முக்கிய இரகசியம்!**

கிரிக்கெட் ஆட்டத்தில் இன்று இலங்கைதான் உலக சாம்பியன். மெய்வல்லுநர் போட்டியிலும் பெண்கள் பிரிவில் 200 மீற்றர் ஓட்டத்திலும் இலங்கைதான் உலகில் 2 ஆவது இடத்தை வகிக்கின்றது.

பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கைதான் தெற்காசியாவில் முடிசூடா ராணியாகத் திகழ்கின்றது. உதைபந்தாட்டப் போட்டியிலும் இலங்கை துரித வளர்ச்சி அடைந்து வருகின்றது. அதேபோல் றகர் ஆட்டத்திலும் இலங்கை வேகமாக வளர்ந்து வருகின்றது.


போட்டியில் இம்முறை இலங்கை அணி முதலில் மாலைதீவு அணியை 103-12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மிக இலகுவாக வென்றது.

2 ஆவது போட்டியில் இந்திய அணியை 85-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை வென்றது. 3 ஆவது போட்டியில் மலேஷிய அணியை 49-35 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது.

இலங்கை அணிக்கு இப்போட்டிதான் சற்று சோதனை மிகுந்த ஆட்டமாக முற்பகுதியில் இருந்தபோதும் பிற்பகுதியில் இலங்கை அணியின் வேகமான ஆட்டத்துக்கு மலேஷிய அணியின் வீராங்கனைகளினால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இலங்கை அணியின் வேகமானதும் மிக சாதுரியமானதுமான ஆட்டத்தை அவதானித்த உலக வலைப்பந்தாட்ட அவதானிகள் வருங்காலத்தில் இலங்கை வலைப்பந்தாட்டப் போட்டியில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பிடித்து விடும்'' என்று கருத்துக் கூறியுள்ளார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனைகளும் இருக்கின்றார்கள். என்பதை இவ்விளையாட்டின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வரும் உத்தியோகத்தர்கள் கருத்தில் கொண்டால் வலைப்பந்தாட்டத்தில் இலங்கை உச்சத்திற்கு சென்று விடும் என்று கூறலாம்.




நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவில் நடைபெறும் தெற்காசிய நாடுகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை அணியிடம் தோல்வி அடைந்த பாகிஸ்தான் அணியை படத்தில் காணலாம்.

# உலகநாடுகளின் பார்வை இன்று இலங்கையின் பக்கம்

**அனைத்து விளையாட்டு துறையினரையும் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பியது கிரிக்கட்!**

திடீரென இலங்கை விளையாட்டுத் துறையில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வருவதற்கு முக்கிய காரணம் என்ன என்று பலர் ஒரு வகை திகைப்புடன் கேட்கின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை அடைந்து வரும் அடுக்கடுக்கான வெற்றிகள்தான் கிரிக்கெட் ஆட்டம் துரித வளர்ச்சி அடையும் இவ்வேளையில் மற்றைய விளையாட்டுத்துறைகளும் ஏன் வளர்ச்சி அடைய முடியாது?

மற்றைய துறைகளின் விளையாட்டுப் பயிற்சியாளர்களையும் பொறுப்பான உத்தியோகத்தர்களையும். தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பிவிட்டது. கிரிக்கெட் ஆட்டம் தான்.

கிரிக்கெட் ஆட்டத்தின் பயிற்சியாளர்களுக்கும். உத்தியோகஸ்தர்களுக்கும் நாங்கள் சளைத்தவர்கள் இல்லை'' இன்று உணர்வு தற்போது ஏற்பட்டதினால்தான் இன்று இலங்கையும் ஒரு விளையாட்டுத் திறனைக் கொண்ட நாடாக மாறி வருகின்றது என்று மற்றவர்கள் கூற ஆரம்பித்து விட்டார்கள்.

மாகாணபேதங்களின்றி வீரர்கள் தெரிவு செய்யப்பட்டாள் குறிப்பாக கிராமப்புறங்களில் இலை மறை காயாக இருக்கும் விளையாட்டு வீரர்களை இனம் கண்டு ஊக்குவித்தால் விளையாட்டுத் துறை முன்னேற்றமடையும் என்று இலங்கை கருதுகிறது.

இவ்வாறான பணிகளுக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், விளையாட்டுத்துறையில் போதிய அனுபவசாலிகளாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறான பணிகள் வருங்காலத்தில் தேசப்பற்றுடன் மேற்கொள்ளப்பட்டால் அனைத்து விளையாட்டுத் துறைகளிலும் இலங்கை துரித வளர்ச்சி அடையும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

தற்போது, சிங்கப்பூரில் நடைபெற்று முடிவடைந்த ஆசிய வலைப்பந்தாட்ட சாம்பியன் கிண்ணத்தை இலங்கை அணி மிக இலகுவாகக் கைப்பற்றி நாடு திரும்பியுள்ளது. இக்கிண்ணத்தை இலங்கை தொடர்ந்து 2 ஆவது தடவையாகக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப்

தெற்காசிய நாடுகளிடையே இன்று நேபாளத்தின் தலைநகரான கத்மண்டுவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியிலும் இலங்கையின் உதைபந்தாட்ட அணி சிறப்பாக விளையாடி வருவதைப் பார்த்தால் இந்த அணியும் தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சாம்பியன் 97'' வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றி நாடு திரும்பும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அணி முதலில் பாகிஸ்தான் அணியைச் சந்தித்தது. பாகிஸ்தான் அணி ஒரு பலம் வாய்ந்த அணியாகக் கருதப்பட்டது. இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் பாகிஸ்தான் அணி நேபாள அணியை தோற்கடித்து வெற்றிநடை போட்டது. பாகிஸ்தான் இலங்கை அணிகளின் போட்டி ஆரம்பமானபோது இலங்கை பெரும்பாலும் பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்து விடும் என்ற ஒரு உணர்வு ரசிகர் மத்தியில் ஏற்பட்டது.

அந்தளவுக்கு பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் மிக வேகமாக விளையாடியது. 30 நிமிட ஆட்டத்தின் பின்னர் பாகிஸ்தான் அணியின் ஆட்டத்தில் ஒருவித சோர்வு ஏற்பட்டதை அவதானித்த இலங்கை அணியின் முன்னணி வீரர்களான அமனுல்லாவும், ரொஷான் பெரேராவும் மிகவும் சாதுரியமாக விளையாட ஆரம்பித்தார்கள்.

இவர்களுக்கு பக்கத்துணையாக இலங்கை அணியின் காப்டன் சம்பத் பெரேராவின் ஆட்டம் அமைந்திருந்தது. இலங்கை அணியினர் இடைவேளைக்கு முன் ஒரு கோலையும் இடைவேளைக்குப் பின் 2 ஆவது கோலையும் போட்டு 2-0 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை தோற்கடித்தனர்.

இலங்கை அணியின் திறமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது.

இலங்கை அணி இனி நேபாள அணியை சந்திக்க இருக்கின்றது. இலங்கை அணியிடம் தோல்வி அடைந்த பாகிஸ்தான் அணியிடம் நேபாளம் ஏற்கெனவே தோல்வி அடைந்து விட்டது. இதனால் நேபாள அணி இலங்கைக்கு ஒரு சவால் அணியாக இருக்க மாட்டாது என்று கூறப்படுகிறது.

அத்துடன் முன்னர் ஈரானிலும், ஓமானிலும் நடைபெற்ற போட்டிகளில் இலங்கை அணியிடம் நேபாள அணி தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் சிறிசேன புதிய வியூக அமைப்பில் வீரர்களை விளையாட பயிற்றுவித்துள்ளதனால் இலங்கை அணிவீரர்கள் எந்தெந்தப் பகுதியில் நின்று மைதானத்தில் விளையாடுகின்றார்கள் என்பதை எதிர் அணியினர் இலகுவில் இனங் கண்டு கொள்ள முடியாது திணறுகின்றனர்.

கத்மண்டு சென்றுள்ள இலங்கை உதைபந்தாட்ட அணிக்கு முகாமையாளராகச் சென்றுள்ளவர் ஹரல் அன்ரனி. இவர் முன்னாள் இலங்கை உதைபந்தாட்ட அணியில் சிறந்த கோல்காப்பு வீரராகத் திகழ்ந்தவர்.

அதேபோல் பயிற்சியாளர் சிறிசேனாவும் இலங்கை அணியில் நீண்ட காலமாக சிறந்த மத்திய முன்னணி வீரராகத் திகழ்ந்ததுடன் இலங்கை அணியின் காப்டனாகவும் இருந்தவர். இவர்கள் இருவரின் நீண்டநாள் பயிற்சியில்தான் இன்றைய இலங்கை உதைபந்தாட்ட அணி உருவாகி உள்ளது. இவ்விருவரின் அனுபவத் திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டு இலங்கை அணியில் இன்று பின்வரிசையில் விளையாடும் அன்டன் சில்வா.

இவர் அணியில் எந்தப் பகுதியில் விளையாடுகின்றார் என்பதை எதிரணியினரால் இலகுவில் இனம் கண்டுகொள்ள முடியாது இருப்பதாகக் கூறுகின்றார்கள். இவர் முன்னணி வீரரா அல்லது பின்னணி வீரரா, அல்லது மத்திய பின்னணி வீரரா?

இக்கேள்விகளுக்கு இலகுவில் விடை கண்டு கொள்ள முடியாதபடி வீரர் அன்ரன் சில்வா உருவாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு ஒரு புதிய பாணியில் உருவாக்கப்பட்டுள்ள இலங்கை அணி வெற்றிக் கிண்ணத்துடன் நாடு திரும்புமா இல்லையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# சர்வதேச டென்னிஸ் வீரர்களுக்கு தாய்நாட்டில் கிடைத்த தோல்வி

உலகில் இன்று டென்னிஸ் ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் முதலிடத்தை வகிப்பவர் சாம்ப்ராஸ்.

மகளிர் பிரிவில் முதலிடத்தை வகிப்பவர் மொனிக்கா செலஸ். இவ் விருவரும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள். இவ்விருவரும் வெளி நாடுகளில் நடைபெற்ற ஒற்றையர் டென்னிஸ் ஆட்டங்களில் அனைத்து வெற்றிக் கிண்ணங்களையும் கைப்பற்றியவர்கள்.

ஆனால் இவ்விருவரும் தற்போது தமது சொந்த நாடான அமெரிக்காவில் நடைபெற்று முடிந்த அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் படுதோல்வி அடைந்தது அமெரிக்க நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள டென்னிஸ் ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

வீரர் சாம்ப்ராஸ் மேற்படி போட்டியில் தொடர்ந்து நாலு தடவைகள் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றி சாதனை படைத்தவர். இம்முறையும் இவர்தான் தமது சொந்த நாட்டின் கிண்ணத்தைக் கைப்பற்றுவார் என்று பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்தனர்.

அந்தளவுக்கு சாம்ப்ராஸ், மொனிக்கா செலஸ் ஆகியோரின் ஆரம்பப் போட்டி வெற்றிகள் எடுத்துக் காட்டின. இருந்தபோதிலும் இவ்விருவரும் கால் இறுதி ஆட்டத்திற்கு முன்பே படுதோல்வி அடைந்ததுதான் பெரும் ஆச்சரியமான விடயம்.

அமெரிக்க வீரர் சாம்ப்ராஸ் செக் குடியரசின் வீரர் பீட்டர் கோர்டாவிடம் தோல்வி அடைந்தது பெரும் ஆச்சரியம்தான். இவர்கள் இருவருக்கு மிடையில் 3 மணித்தியாலம் 37 நிமிடங்கள். ஆட்டம் நீடித்தாலும் இறுதியில் 6-7, 7-5, 7-6, 6-3, 7-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் செக்

(V ஆம் பக்கம் பார்க்க)

## வாரம் ஒருவர்

# கை, கால் முறிந்து போனால்.....

# காராளசிங்கம் டாக்டரிடம் ஆளைச் சேர்த்து விடுங்கள்!



### கிழக்கில் எங்கும் தெரிந்த பெயர்.

கைகால் முறிந்து படுத்தபடுக்கையாகி விட்டீர்களா?

''உடனே போய்ச் சேருங்கள் காராளசிங்கம் டாக்டரிடம்'' என்றுதான் மட்டக்களப்பு பிரதேசத்தில் எவரும் கூறுவார்கள்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் முறிவு வைத்தியம் என்றதும் உடனடியாக அனைவர் மனதிலும் நினைவுக்கு வருபவர் டாக்டர் காராளசிங்கம்.

68 வயதைத்தாண்டிய பொழுதிலும் இன்றும் சுறுசுறுப்புடனும், திடகாத்திரத்துடனும் சிறிதேனும் சளைக்காமல் தனது தொழிலில் கவனம் செலுத்தி வருகின்றார் காராளசிங்கம்.

அவர் ஆயுர்வேத வைத்தியர் மட்டுமன்றி சமாதான நீதவானாகவும் திடீர் மரணவிசாரணை அதிகாரியாகவும் மக்களுக்கு தொடர்ந்து சேவை ஆற்றி வருகின்றார்.

அவரை நேரடியாகச் சந்தித்து அவரின் வைத்தியத்துறை தொடர்பாகக் கேட்ட பொழுது உற்சாகத்துடன் விளக்கம் தருகிறார்.

இவரது தந்தையார் சீனித்தம்பி நீண்டகாலமாகவே முறிவு வைத்தியத்தில் கைதேர்ந்தவர். அவர் தனது மாமனாரான முத்துக்குமார் - சரவணமுத்து மூலமாகக் கற்றுக் கொண்ட வைத்தியத்தின் மூலம் 1924 ஆம் ஆண்டு முதல் முறிவு வைத்தியத்தைச் செய்து வந்துள்ளார்.

டாக்டர் காராளசிங்கம் 1931 ஆம் ஆண்டு இரண்டரை வயதாக இருந்த பொழுது கடுமையான நுரையீரல் வியாதியினால் பீடிக்கப்பட்டார். அப்பொழுது அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவரைக் கைவிட்டனர். வாழைச்சேனை கிராம வைத்தியசாலையில் அன்று கடமை ஆற்றிய டாக்டரின் உதவியை தந்தையார் நாடிய

**'பணத்தைக் கருதக் கூடாது. ஏழைகளுக்கு சேவை புரிய வேண்டும்'**

பொழுது அவரை பரிசோதித்த டாக்டர் ''உமது மகனை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் இன்னும் 21 நாள் அவகாசம் எனக்கு வேண்டும். மகன் உயிர் தப்பினால் அவனை தேசத் தொண்டனாக மாற்ற வேண்டும்'' என்று கூறினார் டாக்டர்.

அவர் சிகிச்சையை மேற்கொண்டார். காராளசிங்கம் உயிர் தப்பினார்.

இந்த வார்த்தையை தந்தையார் அடிக்கடி கூறுவதாகச் சொன்னார் காராளசிங்கம்.

அதன் பின்னர் அவர் படித்துக் கொண்டு தந்தையாரின் வைத்தியத்துறைக்கு உதவி வந்தார்.

சொந்த இடமான மீராவோடை தமிழ்க் கிராமத்தில் உள்ள பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற அவர் பின்பு ஓட்டமாவடி முஸ்லிம் பாடசாலையிலும், மட்/அர்ச்.மரியநாயகி பாடசாலையிலும் (புனித மிக்கல் கல்லூரி) கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலை தவிர்ந்த நேரத்தில் தந்தையாருடன் இணைந்து முறிவு வைத்தியத்தில் ஈடுபட்டு வந்தார்.

அந்தக்காலத்தில் முறிவு வைத்தியம் செய்ய நீண்ட தொலைவில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி அமைத்து அவர்களை பராமரித்து வந்ததாகக் கூறுகின்றார் டாக்டர் காராளசிங்கம்.

அந்தக்காலத்தில் ஆங்கில வைத்தியத்தில் நாட்டம் குறைந்திருந்த மக்கள் ஆயுர்வேத வைத்தியத்தையே பெரிதும் நம்பி இருந்தனர்.

1948 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி.பரீட்சையில் சித்தி அடைந்ததும் மேற்படிப்பை நிறுத்திவிட்டு சுதேச வைத்தியக் கல்லூரிக்குச் சென்று மருத்துவக் கல்வியைப் பெற்று 1954 ஆம் ஆண்டு பட்டம் பெற்று வெளியேறினார். பின்பு தொடர்ந்து தந்தையாருடன் இணைந்து முறிவு வைத்தியத்திலும் பொது வைத்தியத்திலும் ஈடுபட்டார்.

''பணம்தான் முக்கியம் எனக் கருதாது ஏழை மக்கள் மீது அன்பு கொண்டு குறைந்த செலவில் வைத்தியம் செய்ய வேண்டும்'' என அடிக்கடி தந்தையார் கூறுவாராம்.

இந்தக்கால கட்டத்தில் அவர்கள் சொந்தக் கிராமமான மீராவோடையில் வைத்தே வைத்தியம் செய்து வந்தனர்.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் முதன் முதலாக அமைக்கப்பட்ட மந்திரிசபையில் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா சுகாதார மந்திரியாகவும் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்

**-வாழைச்சேனை நிருபர்-**

அமரர் வி.நல்லையா உதவி சுகாதார மந்திரியாகவும் கடமை ஏற்றனர்.

அந்த வேளையில் சுதேச வைத்தியத்தில் நாட்டம் கொண்ட அவர்கள் டாக்டர் காராளசிங்கத்தின் தந்தையாருக்கு வாழைச்சேனை புகையிரத நிலைய சந்திக்கு அருகாமையில் வைத்திய நிலையம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தை வழங்கினர்.

இன்றுவரை அந்த இடத்தில் இருந்தே டாக்டர் காராளசிங்கம் வைத்தியம் செய்து வருகின்றார்.

1961 ஆம் ஆண்டு அவரின் தந்தையார் இறந்த பின்பு அங்கு வரும் முறிவு நோயாளிகளுக்கு மகன்தான் சிகிச்சை அளிக்க வேண்டி இருந்ததால் பொதுவைத்தியத்தைக் கைவிட்டு முறிவு வைத்தியத்தைக் தொடர்ந்தார். தந்தையார் வசித்து வந்த பதிவாளர் பதவியும் மகனுக்கு வழங்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு முதல் கோரளைப்பற்று மரண விசாரணை அதிகாரியாக இருந்து வந்ததால் இரண்டு பதவியையும் ஒருவர் வகிக்க முடியாத காரணத்தினால் பதிவாளர் பதவியைத் துறந்தார்.

''எலும்பு, தசை என்பவற்றை மேலும் மேலும் அறிய வேண்டும் என்ற ஆசையினால் மரண விசாரணை அதிகாரி பதவியை நான் விரும்பினேன்'' எனக் கூறுகின்றார்.

இந்த வைத்தியத்துறை தனது மரண விசாரணைத் தீர்ப்புகளுக்கு பெரிதும் உதவியதாகக் கூறும் காராளசிங்கம் 1958 இல் இருந்து தான்

**"நாற்பது வருடமாக தீர்ப்புக் கூறுகிறேன் எதுவும் பிழைத்ததில்லை"**

வழங்கிய தீர்ப்புகள் யாவும் நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றார்.

மனைவி அருந்ததிநாயகி மூதூரில் ஆசிரியையாக இருந்தவர். திருமணத்திற்குப் பின்னர் தொழிலை இராஜினாமாச் செய்துவிட்டு கணவருடன் சேர்ந்து முறிவு வைத்தியத்திற்கு உதவி வருகிறார். 1970 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆயுர்வேத பரீட்சையில் தோற்றி சித்தி பெற்று பட்டமும் பெற்றவர் மனைவி.

அவர்கள் இருவரும் மட்டுமன்றி பிள்ளைகளும் ஆயுர்வேத வைத்தியத்தை நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

முறிவு வைத்தியத்தில் முழுக்குடும்பமுமே ஈடுபட்டு வருகிறது.

''அரசாங்கம் ஆயுர்வேதத்திற்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கின்றதோ அதேபோல் சித்த வைத்தியத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து தனிக்கல்லூரி அமைப்பதன் மூலம் சித்தவைத்தியத்தையும் அபிவிருத்தி செய்ய முடியும்'' என்று கூறுகிறார் காராளசிங்கம்.

தனது மறைவுக்குப்பின்னர் இப்பிரதேசத்தில் மனைவி மக்கள் தனது பணியைத் தொடர்வார்கள் என்றும் பெருமையுடன் அவர் கூறகின்றார். கிழக்கில் எங்கும் அவரது பெயர் பரிச்சய்மானது. அவர் இன்னும் ஓயாமல் இயங்குகிறார்.

---

## எலிக்கறி என்றால் கிலிதான்!

உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களும் எதையெதையெல்லாமோ உணவாக உட்கொள்ளுகிறார்கள். நாய், பூனை, குரங்கு, தவளை, பாம்பு, எறும்பு என்று ஏகப்பட்ட பிராணிகளை ஏப்பம் விடும் மனிதர்கள் பல நாடுகளில் வசிக்கிறார்கள்.

நினைத்துப் பார்த்தால் நமக்கெல்லாம் அருவருப்பு ஏற்படுவது நியாயம்தான். ஆனால் நாம் கோழி இறைச்சி சாப்பிடுவதைப் பார்த்து அருவருக்கும் மனிதர்கள் சில நாடுகளில் உள்ளனர்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க பண்டைய ரோமானியர்களின் விருந்தின்போது உணவில் முக்கியமாக இடம்பெறும் இறைச்சி எது தெரியுமா?

வீட்டு எலிகள்தான்!

எலிக்கறி இல்லாமல் ரோமானியர்களின் வீட்டில் எந்த விருந்துமே நடப்பதில்லை. வீட்டில் விருந்து என்றால் எலிகள்பாடு பரிதாபம்தான்!

ஆனால் இப்போதெல்லாம் ரோமானியர்களுக்கு எலி என்றாலே கிலி! பிளேக் நோயினால் அவர்கள் அச்சமடைந்திருக்கிறார்கள்.

---

## கண் இமைக்கும் நேரத்தில் 155 குழந்தைகள்

நீங்கள் கண் இமைக்கும் ஒரு செக்கன் நேரத்தில் உலகில் 155 குழந்தைகள் பிறக்கின்றன என்பது சமீபத்திய மதிப்பீடு.

இதனை வைத்துக் கொண்டு பார்த்தால் ஒவ்வொரு மணித்தியாலமும் உலகெங்கும் 9300 குழந்தைகள் பிறக்கின்றன.

இத்தனை வேகத்தில் போனால் எதிர்காலத்தில் உலகம் எப்படித் தாங்கப் போகிறது. என்பதுதான் பிரச்சினை!

---



'எல்லா நாடுகளிலும் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று என் நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுத்தேன். ஆனால் என் நாடு நடாத்திய போட்டியில் தோல்வி அடைந்து விட்டேனே' என்ற சோகத்தில் தலைகுனிந்து நிற்கின்றார் அமெரிக்க வீரர் பீட் சாம்ப்ரஸ்.

## சர்வதேச...

(IV ஆம் பக்கத்தொடர்ச்சி)

குடியரசு வீரர் கோர்டா வெற்றி பெற்றார்.

இதேபோல்தான் அமெரிக்க வீராங்கனை மொனிக்கா செலஸ் ரூமேனியா வீராங்கனையான ஜீனாவிடம் 6-7, 7-6, 6-3 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வி அடைந்தார். இதில் மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால் சாம்ப்ராஸை வெற்றி கொண்டவரும் மொனிக்கா செலஸை வெற்றி கொண்டவரும் கால் இறுதி ஆட்டத்தில் படுதோல்வி அடைந்து விட்டார்கள்.


இறுதியில் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய வீரர் பாட்ரிக் ராப்டரும் சுவீடன் வீராங்கனை மார்டினா ஹிங்கிஸும் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணங்களை முத்தமிட்டார்கள். சுவீடனைச் சேர்ந்த 17 வயதான இளம் வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ் இவ்வருடம் விம்பிள்டன் வெற்றிக் கேடயத்தையும் அவுஸ்திரேலியா ஓபன் வெற்றிக் கிண்ணத்தையும் கைப்பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.





அமெரிக்காவில் நடைபெற்ற 'ஓபன்' டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்ற சுவீடன் வீராங்கனை மாட்டீனா ஹிங்கிஸும் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய வீரர் பாட்ரிக் ராப்டரும் வெற்றிக் களிப்பில் தமது வெற்றிக் கிண்ணங்களை முத்தமிடுகின்றார்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 7



### கடந்த வார குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. பாதம் | 1. பாசி |
| 4. மதி | 2. தலை |
| 6. பூ | 4. மதம் |
| 7. சிலை | 5. திலகம் |
| 9. தலம் | 12. மங்கை |
| 12. தங்கம் | 13. தந்தி |
| 17. மந்தி | 16. பாதனி |
| 20. நாதம் | 21. நாமம் |
| 24. கைதி | 23. அதிபர் |
| 26. மணி | 29. ருசி |
| 28. திரு | 30. கால் |
| 30. காகம் | 31. கவிதை |
| 33. பசி | 35. செவி |
| 35. செல்வி | 38. பால் |
| 38. பா | |
| 40. கவி | |
| 42. தையல் | |

### இடமிருந்து வலம்

1. கலைஞர் என்று சொன்னால் போதும். பெயர் அவசியமில்லை.
6. வெறும் இசைக்கருவி தான். ஆனால் முத்தமிழ் வித்தகர் எழுதிய நூலைப்படித்து பொருள் விளங்கி இக்கருவியை மீட்டுவதற்குரிய வித்தகர் எவருமில்லை.
8. அக்கறையீனம். குழம்பியுள்ளது.
13. அத்தையென்றும் அழைக்கலாம்.
16. நிஷ்டை (தலைகீழ்)
20. தியேட்டருக்குள் போனால் பெரியது. வீட்டில் பார்த்தால் சிறியது.
22. சந்திரனை அழகிய பெண்ணின் முகத்துக்கு உவமானமாகக் கூறுகிறார்கள்.
24. யாழ். பயணிகள் சேவையில் ஈடுபடும் கப்பல் ஒன்றின் பெயர்.
27. இல்லை என்பதன் எதிர்ப்பதம்.
30. ஒரு சில படங்களையே இயக்கி பிரபலமான டைரக்டர். அமரராகி விட்டார்.
33. வெறும் கல்லில் வடித்த உருவம். ஆனால் எத்தனை ...ல வடிவம்! (தலைகீழ்)
37. ...புக்கு (தலைகீழ்)
3... வெள்ளையர்கள் உயிரைக் காப்பாற்றி வைத்திருந்தார்கள். ...சுதந்திரம் பெற்ற இந்தியர்களால் இந்த மாமனிதரை காப்பாற்ற முடியவில்லை.

### மேலிருந்து கீழ்

1. பெரிதானால் நாவல். சிறிதானால் சிறுகதை.
2. சுவை.
3. இந்தியாவில் புழக்கத்திலுள்ள நாணயப் பெறுமதி. (தலைகீழ்)
4. இரவில் வருவதுண்டு. பகலில் அனுபவித்தாலும் சுகம் தான்.
5. மன்மதனின் மனைவி. அழகிய பெண். (தலைகீழ்)
6. உத்தர பிரதேச முதல்வர். குழம்பியுள்ளார்.
7. வேறெந்த மொழியில் இத்தனை சிறப்பு உண்டு. (தலைகீழ்)
16. சிங்கம் (தலைகீழ்)
19. காலணி (தலைகீழ்)
20. அச்சம், பீதி என்பவை சற்று அதிகமானதும் ஏற்படும் உணர்வு.
25. ஒவ்வொருவருக்கும் ஒரு... உண்டு. ஆனால் சிலருக்கு சாதகத்தில் நம்பிக்கை இல்லை.
27. தொழிற்சாலை சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
29. கஞ்சன் என்றும் சொல்லலாம். (தலைகீழ்)
36. புள்ளியிட்ட மிருகம். மருளும் கண்கள். (தலைகீழ்)
37. தமிழினம் இன்று "திக்கு" தெரியாமல் திண்டாடுகிறது.

...டந்தவாரப் போட்டியில் சரியான விடைகளை எழுதிய அனைவருக்கும் எமது பாராட்டுகள். 100ரூபா பணப்பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி வாசகர்

**எஸ்.கே.கே.குருபரன்**
**77/3, கவ்டான வீதி,**
**தெஹிவளை.**

உங்கள் விடைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக் கிடையில் தபாலட்டையில் வந்து சேரட்டும்.

குறுக்கெழுத்துப்போட்டி இல. 7
புதன் வசந்தம்
**United Newspapers (Pvt) Ltd.**
**68, Ellie House Road,**
**Colombo-15.**

### பாராட்டுப் பெறுவோராகத் தெரிவு செய்யப்பட்ட 10 பேர்


1. **ச. மகேஸ்பாலன்** மே/பா தாஸ் ஸ்டோர்ஸ், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
2. **தாஹிர் எம்.ஸிம்ஸார்** இல. 3, எம்.ஸி.எஸ். கட்டிடம், கொழும்பு வீதி, தில்லையடி, புத்தளம்.
3. **த.மிர்ணாளினி** 51, சிவபுரம், கிராஞ்சி, பூநகரி.
4. **கே.அரசேஸ்வரன்** கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
5. **எம்.ரீ.எம்.அமீன்** 31/2, தபாலக வீதி, ப/ ஹாலி - எல.
6. **ந. ரூபகாந்தி** மீராவோடைச்சந்தி, வாச... ...னை.
7. **க. தீ...** மே/ ...ானமுத்து அ... ...வைத்திய சா... ...ப்பாய்.
8. **வ. மோகன்** இல. 2, சமகிகம, பவ்வாகம, நாவலப்பிட்டிய.
9. **திருமதி க. சகுந்தலாதேவி** 975, அன்புவழிபுரம், திருகோணமலை.
10. **எஸ்.கோபாலரத்தினம்** தேற்றாத்தீவு - 01, தேற்றாத்தீவு.

# வலி இல்லாத இன்ஜெக்சன்

பிரிட்டனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஊசியே இல்லாமல் 'இன்ஜெக்சன்' போடும் வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதில் மருந்து திரவவடிவில் இல்லாமல் பவுடர் வடிவில் இருக்கும்.

மணிக்கு 2,700 கி.மீ. வேகத்தில் மருந்தை உடம்புக்குள் செலுத்துவர். தோல் வழியாகவோ, வாய்வழியாகவோ மருந்து செலுத்தப்படும். ஊசிமருந்தை பவுடர் வடிவில் வைத்து ஹீலியம் வாயுவைப் பயன்படுத்தி அதை உடலில் செலுத்துவர்.

காற்றின் வேகத்தைப் போல இரண்டு மடங்கு வேகத்தில் மருந்து செலுத்தப்படுவதால் அப்போது லேசான ஓசை கேட்கும். ஆனால் வலி தெரியாது. குழந்தைகள் கூட ஊசிக்குப் பயப்படாது. சொல்லப்போனால் ஊசி போடப்படுவதே அவற்றுக்குத் தெரியாது. 4 ஆண்டுகளுக்கு முன்னால் 'ஒக்ஸ்போட்' பல்கலைக் கழகத்தில் இந்தத் தொழில் நுட்பம் சோதித்துப் பார்க்கப்பட்டது.



இளவரசி டயானா கார் விபத்தில் மரணமடைவதற்கு முன்னதாக அவரது காதலர் டொடி அல்ஃபாயிட்டுடன் 30.08.1997 அன்று பாரிஸிலுள்ள றிற்ஸ் ஹோட்டலுக்குள் பிரவேசித்த காட்சி இது! ஹோட்டலின் பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்டிருந்த தன்னியக்க வீடியோ கமெரா டயானாவை படம் பிடித்தது. டொடி அல்ஃபாயிட் இப்படத்தில் தென்படாமல் மறைந்திருக்கிறார். அல்ஃபாயிட் குடும்பத்தினர் இப்படத்தை வெளியிட்டுள்ளனர்.

(...த்தொடர்ச்சி)

புதியதொரு சகாப்தத்தை உருவாக்கத் தன்னைத் தயார் செய்துகொண்டிருக்கின்றது.

ஒரு வாரத்திற்கு முன்னர் இடம்பெற்ற டயானாவின் மரணத்தையடுத்துப் பத்திரிகைகளே டயானாவைக் கொலைசெய்தன என அவற்றைக் குற்றஞ்சாட்டி அவற்றின் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்தார் டயானாவின் சகோதரர் ஸ்பென்சர். பத்திரிகைச் சொந்தக்காரர்களின் கைகளில் இரத்தக் கறை படிந்துள்ளதாக அவர் கூறினார்.

சனிக்கிழமை வெஸ்ற்மின்ஸ்ரர் தேவாலயத்தில் லண்டன் முழுவதும் எதிரொலித்த பாராட்டொலிக்கு மத்தியில் ஸ்பென்சர் தமது இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

'புராதன காலத்தில் வேட்டையாடுதலுக்குப் பொறுப்பான பெண் தெய்வத்தின் பெயரைக் கொண்டிருந்த டயானா இந்த நவீன யுகத்தில் மிகவும் வேட்டையாடப்பட்ட ஒரு பெண்ணாக மாறியிருந்தார்.'

'ஏர்ல் ஸ்பென்சர் தனது சகோதரி வேட்டையாடப்பட்டுள்ளதைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் எங்களது பத்திரிகை அலுவலகம் உள்ளடங்கலாக இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திலும் மிகவும் கவனத்துடன் விளங்கிக்கொள்ளப்படவேண்டும்' என இன்டிபென்டன்ற் என்ற பத்திரிகை ஞாயிற்றுக்கிழமை கூறியது.

மக்களுக்கு எது விருப்பமோ அதனையே பத்திரிகைகள் கொடுக்கின்றன எனப் பத்திரிகைகள் கூறுவது பொருத்தமான காரணமல்ல. ஒரு பொறுப்புள்ள பெற்றார் இல்லாதபோது ஒரு குழந்தை தன்னால் உண்ணக்கூடிய முழு இனிப்புக்களையும் உண்ணும்.

'ஆனால், அதுவும் ஓர் அடிப்படை உண்மையை வெளிப்படுத்துகிறது. டயானாவுடன் நாங்கள் நடந்துகொண்டவிதம் சிறு பிள்ளைகள் நடந்து கொள்வதுபோல் அமைந்திருந்ததுடன் டயானாவைப்பற்றி மேலும் மேலும் தகவல் பெற விரும்பினோம். கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்கள் எங்களின் சார்பாக டயானாவைத் துரத்திச் சென்றார்கள். ஏனென்றால் எப்போது நிறுத்துவதென்பதை நாங்கள் தெரிந்திருக்கவில்லை' என அந்தப் பத்திரிகை கூறியது.

ஏர்ல் ஸ்பென்சரின் கூற்றின் தாக்கத்தைத் தகவல் தொடர்பு சாதனங்கள் புறக்கணிக்க முடியாது என 'ஒப்சேவர்' என்ற பத்திரிகை கூறியது.

இன்றுவரை பிரித்தானியாவின் தகவல் தொடர்பு சாதனங்களுக்கான சட்டங்கள் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கைகளுக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதற்கெதிராகப் போதிய பாதுகாப்பை வழங்கவில்லை.

இந்தச் சட்டங்கள் பிரித்தானிய சமூகத்தின் மிக முக்கியமான விழுமியங்களுக்கு இனிமேலும் சமமானவையாக இல்லை என இந்தப் பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் கூறியது.

ஒரு புதிய சமநிலை எட்டப்படவேண்டும். இதில் முதலாவது நடவடிக்கை மிகவும் தனிப்பட்டதும், இரகசியமானதுமான புகைப்படங்கள் பெறப்படுவது, பிரசுரிக்கப்படுவது தொடர்பாக புதிய ஒழுங்குவிதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இங்குள்ள முரண் என்னவென்றால் ஐரோப்பாவிலேயே மிகவும் கடுமையான தனிப்பட்ட வாழ்வைப் பாதுகாக்கும் சட்டங்கள் உள்ள பிரான்ஸிஸ் டயானா கொல்லப்பட்டமையாகும்.

# வெயிலில் வேண்டாம் ஐஸ்கிரீம்

சுட்டெரிக்கும் வெயிலில் ஐஸ்கிரீம் சாப்பிட்டால் கடும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று பிரிட்டிஷ் மருத்துவப் பத்திரிகையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றில் ஒருவருக்கு பல்ஈறு பகுதியில் ஐஸ்கிரீம்பட்ட ஒரு சில விநாடிகளில் வலி ஆரம்பித்து விடுகிறது. இந்த வலி 30 முதல் 60 விநாடிகளுக்குப் பிறகு உச்சநிலையை எட்டுகிறது. எனினும் அடுத்த 20 வினாடிகளில் அதன்தீவிரம் குறைந்து விடுகிறது. சிலர் விஷயத்தில் இது 5 நிமிடங்கள் வரை நீடிக்கிறது என்றும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு இது சர்வசாதாரணமாக ஏற்படுகிறது என்று அறிக்கையை வெளியிட்டவரும் பேராசிரியருமான ஜோசப் ஜூலிகான் (டெம்பிள் பல்கலைக்கழகம், பிலடெல்பியா, அமெரிக்கா) தெரிவித்தார். இந்த வலி பெரும்பாலும் நெற்றியின் முன் பகுதியில் ஏற்படும். சிலசமயம் கண்ணின் பின்பகுதியில் உணரலாம்.

**என்னால்...** (VIII ஆம் பக்கத்தொடர்ச்சி)
யத்தின் அடையாளம் தான் டயானாவில் மிக அன்பு கொண்ட அன்னை மிக விரைவிலேயே உலகைப் பிரிந்து அவரோடு இணைந்து கொண்டது, என றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் லண்டன் தேவாலய தலைமை கார்டினல் பெசில் ஹியும் (BASIL HUME) குறிப்பிட்டுள்ளார்.

'பாரிய வேறுபாடு கொண்ட சூழ்நிலைகளையும், உலகங்களையும் தமக்குள் உள்வாங்கிய இரண்டு பெண்மணிகள் தங்களுக்கு இயல்பேயான இரண்டு பாதைகளில் சென்றாலும், வாழ்வின் அர்த்தங்களை மற்றவர்களக்கு சார்புடையதான அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வது எப்படியென எமக்குக் காண்பித்தவர்கள்' என்றார் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன்.

''இதுதான் அவர்கள் எமக்கு விட்டுச் சென்ற முழுமையான மரபுரிமைச் செல்வம் (LEGACY) அதற்கு மதிப்பளிப்பதுதான் நமது இன்றைய பணி!'' என்றும் கிளின்டன் கூறினார்.

அல்பேனியாவில் பிறந்திருந்தாலும் இந்தியாவைத் தன் தாய் நாடாக வரித்துக் கொண்டவர் அன்னை தெரேசா.

அன்னை தெரேசா, இளவரசி டயானா... வசதிகளும் வாய்ப்புகளும் அற்ற மக்களின் மத்தியில், ஒப்பீட்டடிப்படையில் வேறுபாடு கொண்ட பாணியில் சேவை புரிந்த இவ்விரு பெண்மணிகளும் ஆசிய மக்களின் மனதில் ஒரு எதிரொலியைத் தோற்றுவித்தார்கள்.

'கத்தோலிக்கம் என்ற மதம் பரவலாக பின்பற்றப்பட்டு வந்த நாடுகளில் கூட அதன் நம்பிக்கை' விமர்சனத்திற்குட்பட்ட கடினமான காலகட்டத்திலும் அன்னை தெரேசா ஒரு கட்டுப்பாடுள்ள கத்தோலிக்கப் பெண்மணியாக நிலைத்து நின்றவர்.

அன்னையின் கிறிஸ்து கோட்பாடு அவரது உள்ளத்தில் ஊடுருவிய வண்ணமே இருந்தது என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' தனது முதல் பக்கத்தில் அன்னைக்கு அஞ்சலி செலுத்தியுள்ளது.

''நிலையாமை, முதுமை, சுருக்கம் ஆனால் ஒளிமயமான அன்னை தெரேசா... அழகும், இளமையும் கொண்ட டயானா...

இவர்களுக்கிடையே பாரிய வித்தியாசங்கள் இருக்க முடியாது. இவர்களுக்கிடையே அரை நூற்றாண்டு இடைவெளியிருந்தாலும் ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும், தனிமைப்பட்டவர்களுக்கும் இவர்களால் அளிக்கப்பட்ட சேவை இவர்களை ஒன்றிணைத்தது'' என்று எகனமிக்ஸ் டைம்ஸ் கருத்துத் தெரிவித்துள்ளது.

விதியின் கரங்களுக்குள்ள வலிமையின் விசித்திரத்தை ஆச்சரிய உருக்கோட்டத்துடன் உணரும் பொழுது இருவரின் மரணங்களும் விரைவான தொடர்ச்சியாகவே அமைந்தன. டயானாவின் ஊர்வலம் புறப்பட சற்று நேரத்திற்கு முன்னர் அன்னை தன் இறுதி மூச்சை விட்டார்.

திருச்சபையின், மதிப்பு மிக்க ஆபரணத்தை, புகழ்பெற்ற கிரீடத்தை, தங்கமயமான இதயத்தை இழந்தமைக்காக துயரம் அனுஷ்டிக்க இன்று நாம் இங்கு கூடியுள்ளோம்.

பிலிப்பைன்சின் சிரேஷ்ட மதகுரு அன்னை தெரேஸாவுக்கு ஞாபகார்த்த வழிபாட்டை நடத்தும்போது இப்படிச் சொன்னார்.

'இருபதாம் நூற்றாண்டின் அசாதாரணப் பெண்மணி அன்னை தெரேசா' என்று புகழாரம் சூட்டினார் அருளப்பர் சின்னப்பர்.

அன்னையின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள கல்கத்தாவின் இல்லத்தின் வெளியே ஒரு அறிவிப்புப் பலகை இப்படி ஒரு வாசகத்துடன் தொங்குகிறது.

'அன்னை யேசுவிடம் போய்விட்டார்'

**இவர்** ....VIIIம் பக்க தொடர்ச்சி)

நீங்கள் கடைசிப்பக்கப் படத்தில் பார்த்த பெண் வேறு யாருமல்ல.. இளவரசி டயானாதான்! 1970 ஆம் ஆண்டு பாடசாலை மாணவியான இருந்தபோது இப்படம் எடுக்கப்பட்டது.

**கொலைப்...** (II ஆம் பக்கத் தொடர்ச்சி)

பம்பாயிலுள்ள சண்டிவில்லி ஸ்டூடியோவுக்கு திலீப்குமார் வருகைதந்தபோது அவருடன் பாதுகாப்பு அதிகாரிகளும் கூடவே ஸ்டூடியோவுக்குள் வந்தனர்.

இந்த அச்சுறுத்தல்களும், மனித வேட்டைகளும் எங்குபோய் முடியப்போகிறதோ?

ஹிந்தி திரையுலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தஅமிதாப் பச்சனையும் கொலை அச்சுறுத்தல் விட்டு வைப்பதாக இல்லை! அவருக்கும் மிரட்டல்கள் வந்த வண்ணமே உள்ளன. முன்னர் பெங்களூரில் உலக அழகுராணிப் போட்டியை நடத்தியதற்காக அமிதாப்பச்சன் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளானார். இந்திய கலாசாரத்திற்கு கேடு ஏற்படுவதாக மகளிர் அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. குண்டுகளை வெடிக்க வைக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அமிதாப்பச்சனுக்கு தனிப்பட்ட முறையில் கொலை மிரட்டல்கள் வந்தன.

இப்போதும் பம்பாய் வன்முறைக் குழுவொன்றிடமிருந்து கொலை மிரட்டலுக்கு உள்ளாகியிருக்கிறார் அமிதாப். வெளியே சுதந்திரமாக நடமாட அவரால் முடியவில்லை! எங்கு போனாலும் ஆயுதம் ஏந்திய கறுப்புப் பூனைகள் பாதுகாப்புக்காக அவரைப் பின்தொடர்கின்றன.

# என்ன பதில்?

எஸ்.பி.

✱ திருமதி கொன்சி நித்தியானந்தன்
உடுவளை மத்திய பிரிவு, கண்டி.

**தமிழன் சமுதாயத்தில் நிம்மதியாக வாழ பணமா அடையாள அட்டையா முக்கியம்?**

தமிழனுக்குஇரண்டுமே பயன்படாமல் போவதுண்டு அடையாள அட்டையைப் பார்த்த பிறகுதான் தமிழன் என்று அறிந்து விசாரணைக்கு அழைத்துப் போவதும் உண்டு. பணம் கூடுதலாக இருப்பவர்களைக் கூட பணம் கறக்கும் நோக்கத்துடன் விசாரணைக்காக கொண்டு செல்வதும் இடம்பெறுவது வழக்கம். மொத்தத்தில் தமிழனின் நிம்மதிக்கு இவை எதுவும் துணைநிற்பதில்லை என்பதே உண்மை!

✱ எஸ்.ராஜசுலோசனா
வைத்தியா வீதி, தெஹிவளை.

**அன்னை தெரேசா- இளவரசி டயானா...ஒப்பிடுக!**

அழகிய இளவரசி அகால மரணமடைந்து விட்டார் என்பதற்காக நீங்கள் உடன் உணர்ச்சிவசப் படுவது சரியல்ல... ஆதரவற்ற மக்களை அரவணைத்து அன்னை ஆற்றிய பணிகளை இரண்டு வரிகளுக்குள் விபரித்து விடுவதற்கில்லை. சர்வதேச ரீதியில் கண்ணிவெடி ஒழிப்பு, எய்ட்ஸ் நோயாளர் நலன் பேணல் என்றெல்லாம் இறுதிக் காலத்தில் டயானா சமூகப் பணியில் காலடியெடுத்து வைத்தது உண்மை... எனினும் டயானாவின் சேவைகளுக்கு அப்பால் அவரது தனிப்பட்ட வாழ்வில் மறுபக்கம் இருந்தது. அன்னையின் வாழ்வில் சேவை என்ற ஒரேயொரு பக்கம் மட்டும்தான். உல்லாசம் என்பதை அறிந்திருக்காதவர் அன்னை தெரேசா!

✱ பொ.யெயஸ்கரன்
ஏரந்தனை, புத்தூர் வடக்கு.

**நான் விரும்பியவளை நேசிப்பதா, என்னை விரும்புபவளை நேசிப்பதா? 'ஜோக்' வேண்டாம். பதில் தருக!**

உங்களை ஆயிரம் பெண்கள் விரும்பக்கூடும். அதற்காக எவளையாவது ஒருத்தியை 'ஓகே' என்று நேசிக்க முடியுமா என்ன? தப்பு... ரீன்ஏஜ் பருவம் தொட்டு நீங்கள் மனசுக்குள் கற்பனை பண்ணி வைத்த மானசீக உருவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு உங்களை விரும்பும் ஒருத்தியை நேசித்து மாட்டிக் கொள்வதா? வேண்டாம் விஷப்பரீட்சை.... நீங்கள் விரும்பியவளையே நேசியுங்கள்!

✱ அருமைத்துரை பரமேஸ்வரன்
நவிண்டில்.

**இளமைக்காதலுக்கும் முதுமைக் காதலுக்கும் என்ன வேறுபாடு?**

அவளோடு பேச வேண்டாம்....அவளுடன் ஒன்றாக வாழவும் வேண்டாம்! அவளைத் தொடுவதும் அவசியமாகப் படவில்லை. ஒரேயொரு திருட்டுச் சந்திப்பு போதும். ஆயிரம் கதைகள் பேசிய மாதிரி....நேருக்குநேர் அவளைப்பார்த்ததும் உலகில் இதைத் தவிர வேறென்ன பெரிது என்று மனம் நினைக்கிறது. இதுவே இளமைக் காதலின் சிறப்பு! முதுமைக்காதலின் பக்குவம், தன்னலம், சுயகௌரவம், செக்ஸ் யாவும் உண்டு.

✱ பி.துஷ்யந்தினி
ஜெம்பட்டாவீதி, கொழும்பு-13.

**தொலைக்காட்சிகளைப் பார்த்தீர்களா? டயானாவின் மரணத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் அன்னை தெரேசாவின் மறைவுக்கு அளிக்கப்படவில்லையே!**

அவர்களுக்கு அது பெரிது எமக்கு இது பெரிது...!

✱ சுதர்சினி, சுகிர்தா
கைதடி மேற்கு, கைதடி.

**சமாதானத்திற்காக யுத்தம் தொடங்கி இரு வருடங்கள் முடிவடைந்து விட்டனவே... எப்போது சமாதானம் ஏற்படும்?**

யுத்தம் நின்றதும்!



டயானாவின் மறுபக்கம்

✱ க.காண்டீபன்
தெஹிவளை.

**யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து(மானிப்பாய்) தற்போது தெஹிவளையில் வசிக்கும் நான் என்னுடன் கணக்கியல் வகுப்பில் கற்கும் மாணவியை விரும்புகிறேன்(ஒருதலைக்காதல்) எனது நண்பன் ஒருவனை காதல் தூது அனுப்பலாம் என்று யோசிக்கிறேன். ஆனால் சரியான முடிவை எடுக்க முடியாமல் திண்டாடுகிறேன். எப்படியும் அவள் எனக்கு வேண்டும்!**

காதலுக்கு தூதுபோன நண்பர்கள் பலர் அந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து கொண்டு கண்ணுக்கு முன்னால் நடமாடுகிறார்கள்(மனம் தளரவேண்டாம்). உங்கள் ஒருதலைக்காதல் அந்தப் பெண்ணுக்கு இன்னும் தெரியாது என்கிறீர்கள். நீங்கள் கேட்டதும் அவள் உடனே தருவதற்கு இது நோட்டுப் புத்தகமா என்ன? முதலில் அவளுடன் நெருங்கிப்பழகினால்தானே 'என்ன இருக்கிறது' என்பது தெரியவரும். வலிந்து பெறும் காதலானது நிஜமாகவே [illegible] இருக்குமென எனக்குத் தோன்றவில்லை. [illegible]தான்....நீங்களே கேட்டுப்பாருங்கள். விபரீதமானால் சமாளித்துக் கொள்ளுங்கள்.

✱ எஸ்.நந்தன்
மேபீல்ட் வீதி, கொட்டாஞ்சேனை.

**கொழும்பில் இளம் பெண்களைப் பார்த்தீர்களா? வரவர சுத்த மோசம்...முழங்காலுக்கு மேல் தெரியும்படியாக மிகவும் கட்டையாக ஆடை அணியத் தொடங்கிவிட்டார்கள். 'இதில்' என்னதான் இருக்கிறது?**

அப்படியெல்லாம் சொல்லக்கூடாது! கொட்டாஞ்சேனையில் இருந்து 'நம்ம நந்தன்' ஒரு ரூபா செலவிட்டு தபால் அட்டையில் 'இது' குறித்து புதன் வசந்தத்திற்கு எழுதி அனுப்பியிருக்கிறார். 'அதில்' விஷயம் இருக்கிறது என்பதால் தானே.

✱ கு.உமாகாந்த்
70,குறோசற் லேன், சுண்டுக்குளி.

**தினக்குரலுக்கும் பழம் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கும் என்ன தொடர்பு? உங்கள் பத்திரிகையின் வெற்றி, இலட்சியம் என்ன?**

'லேபல் பலம் எமக்கு உண்டு. நாம் எழுதியதை வாசிப்பது வாசகர்களின் கடமை' என்றார்கள். நான்கு மதில்களுக்குள்ளேயே பத்திரிகைத் தர்மமும், பத்திரிகையாளர் சுதந்திரமும் முதலாளித்துவ ஆயுதம் கொண்டு ஒடுக்கப்பட்டன. பத்திரிகையாளர்கள் 'வெறும் கூலிகள்' என்றார்கள். அற்பமனிதர்கள் காலில் விழுந்ததால் பெரிய மனிதர்கள் ஆனார்கள். விளைவு.....சுதந்திரக்குரலாக தினக்குரல் உதித்தது. தினக்குரலின் வெற்றி...பல தசாப்த பழம் பத்திரிகை தனக்கே விளம்பரம் தேடி தொலைக்காட்சியில் வாசகர்களிடம் கையேந்துவது! தினக்குரல் இலட்சியம்... எவரையும் வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எல்லோரும் வாழவேண்டும். மேலும் பல தமிழ்ப் பத்திரிகைகள் இலங்கையில் தோன்ற வேண்டும் எமது முதல் இதழில் 'ஆயிரம் மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பில் நாம் இதனைக் குறிப்பிட்டிருந்தோம்.

✱ மருதமுத்து சந்திரா
வவ்வாப்பிட்டிய, புசல்லாவ.

**டயானாவின் மரணம் திட்டமிட்ட விபத்தினால் ஏற்பட்டதெனவும் ஊகங்கள் உலவுகிறதே...**

மணித்தியாலத்திற்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் கார், கொங்கிரீட் தூணுடன் மோதும் என்பதை எவரும் திட்டமிடவேண்டிய அவசியம் இல்லை!

✱ பி.கரன்
இரத்மலானை.



**சுமார் 8 வருடமாக தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரிகிறேன். 'சீனியர்' பதவியொன்று கிடைக்குமென்று தலைகீழாக நின்றுபார்த்து விட்டேன். எனது கனவு நனவாக இல்லை. மனம் உடைந்து போயுள்ளேன். எனக்கு பதவி உயர்வே கிடைக்காதா?**

ஐயையோ தப்பு.... பதவிக்காக தலைகீழாகவெல்லாம் நிற்கக்கூடாது. தலைக்கு அதிக இரத்தம் ஏறி மூளை முழுதாகவே தட்டிவிடும். பதவி என்பது திறமை உள்ளோரை நாடி வருவது....வருடக்கணக்காக முயன்றும் பலிக்கவில்லை என்றால் உங்களுக்குள் 'எதுவும் இல்லை' என்பதே அர்த்தம். இனிமேல் நீங்கள் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள்பதவி இறங்கிப் போகாமல் இருக்கும்படி!

# 'என்னால் இனிமேலும் மூச்சுவிட முடியவில்லை'



1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி.

பம்பாயிலிருந்து கல்கத்தாவிற்குச் செல்லும் ரயிலொன்றின் ஜன்னலோரமாக ஒரு பெண் மணி உட்கார்ந்திருக்கிறார். ரயிலைக் கடந்து செல்லும் மரங்களை ரசித்துக் கொண்டே பய ணம் செய்யும் அந்தப் பெண்மணியின் கண் களிலிருந்து சேரிகள் கடந்து போகின்றன. நிர் வாணமான குழந்தைகள கடநது போகின்றனர். அழகிய தென்னந்தோப்புகள் கடந்து போகின் றன. பல மாடிக் கட்டிடங்கள் கடந்து போகின் றன.

ஆனால், அந்த சேரிகளும் அந்த சேரிகளில் நிர்வாணமாய் நடமாடிய அந்தக் குழந்தைகளும் அந்தப் பெண்ணின் கண்களில் அப்படியே நிலைத்து நிற்கின்றன.

அப்பெண்ணின் உள்ளத்தில் ஒரு அசரீரி ஒலிக்கிறது. ''இந்தக் குழந்தைகளுக்காக உன்னை நீ ஏன் அர்ப்பணிக்கக் கூடாது''

அந்தக் கேள்விக்கு விடை அளித்த அந்தப் பெண்மணி இன்று விழிகள் மூடி உறங்குகிறார், வியத்தகு அரும்பணிகளை முடித்துவிட்டு.

இன்று வறுமையில் உழன்று கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஏழைகளின் கண்ணீரை உலர வைக்க கடந்த அரை நூற்றாண்டாக செயல்பட்டு வந்த அந்த மூச்சுக்காற்று சட்டென்று நின்று போனதும் அந்த அதிர்ச்சியில் உலகமே குலுங் கிப் போனது.

''என்னால் இனிமேலும் மூச்சுவிட முடிய வில்லை'' என்ற அன்னையின் இறுதி வார்த்தை

## அன்னை இயேசுவிடம் போய் விட்டார்

கள் இதயத்தைப் பிழியவைத்தன.

''அன்னையின் பிரிவால் அநாதைகளான இந்தியர்களில் நானும் ஒருவன்'' என்றார் இந்தி யப்பிரதமர் குஜ்ரால். 'இரக்கம்' என்ற வார்த்தை கூட அநாதையாயிற்று என்கிறது உலகம்.

எழுபது வருடங்களுக்கு முன்னர் ஒரு இளம் கன்னியாஸ்திரியாக தன்னை ஈடுபடுத்திக்' கொண்ட போது 'ஒரு மெழுகுவர்த்தியைக் கூட ஏற்றி வைக்க முடியும் என்று நம்பமுடியாத பெண்மணி'' என்று வர்ணிக்கப்பட்டவர் அன்னை தெரேசா.

அன்னை தனது இறுதி மூச்சுக்கு சில மணி நேரங்களுக்கு முன் சொன்ன வார்த்தைகள்.

''அண்ட சராசரத்தின் அழகையும், மகிழ்ச்சி கரமான சூழ்நிலையையும் விட்டுச் செல்வதா கவே நான் உணர்கிறேன். கடவுளின் அழைப்பு எனக்குக் கிடைத்து விட்டது''

அழுக்கு நிறைந்த கல்கத்தாவின் சேரிகளை தன் அகன்ற மனதாலும் இரக்க உணர்வாலும் அழகு றச் செய்தவர் அன்னை. அந்தச் சேரிகளில் கண் ணீருடனும் வேதனையுடனும் வாழ்ந்து கொண்டி ருந்த லட்சக்கணக்கான ஏழைகளின் வாழ்வில் மகிழ்ச்சியை நிரப்பியவர் அவர்.

இவை இரண்டையுமே தான் விட்டுச் செல்வ தாகக் கூறியது எத்தகைய உண்மை என்பதை உலகம் அறிந்து கொண்டதில் வியப்பில்லை.

சமூகசேவைக்கென கடவுளின் அழைப்புக் கிடைத்த அந்தக் கணமே கன்னியர் மடத்திலி ருந்து அன்னை வெளியேறினார். இறைவன் படைத்த வெளியுலகம் அன்னையின் இதயத்தில் வேதனைச் சுமையைத் தான் ஏற்றிவைத்தது. காலம் பூராவும் வேதனையில் தவித்துக் கொண்டி ருக்கும் ஒரு கூட்டம். ம்கிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருக்கும் மற்றொரு கூட்டம். ஏன் இந்த முரண்பாடு என்று அன்னைக்கு விளங்கவில்லை.

இந்த முரண்பாட்டை தகர்த்துவிட வேண்டு மென்ற மூர்க்கத்தனம் தான் அவரது நெஞ்சத்தில் உருவெடுத்தது.

கல்கத்தாவின் பேராயர் மொன்சிக்னர் பேர்டினன்ட் பீரிஸ் (MONSIGNOR FERDINA-ND PERIES) முன்னிலையில் இளம் தெரேஸா நின்று கொண்டிருந்தார்.

''எனக்குத் தெரியும் இந்த பெண்மணியை. தேவாலயத்தில் ஒரு மெழுகுவர்த்தியை பற்ற வைப்பது எப்படி என்று தெரியாத இவரால் எப் படி ஒரு சபையை உருவாக்க முடியும்?''

இப்படிக் கேட்டார் ஆயர்.

அந்த வார்த்தைகள் அன்னையின் இதயத்தில் ஆழமாய் பதிந்துவிட்டன.

தன்னந்தனியாளாய், அடிப்படை எதுவுமின்றி அக்னஸ் கொன்ஜா பொஜாக்ஸியு என்ற தனது பெயரை தெரேசா என்று மாற்றிக் கொண்டார். சேரிகளின் ஊடே தன் தடங்கள் பதித்தார். அதன் மூலம் உலகில் அவர் பதித்த தடங்களின் நிழலில் கோடிக்கணக்கான உயிர்கள் குளிர் காய்கின்றன.

நிலக்கோடுகள் பதித்த வெள்ளையாடை இன்று உலகில் இரக்கத்தின் அடையாளமென இனம் காட்டப்படுகின்றது. அதுவே 1950ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் திகதி அறக் கட்டளைக்கான சமயப்பணி நிறுவனத்தின் சீரு டையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

காசநோயினாலும், ஏப்பு நோயினாலும் வீதி யோரங்களில் செத்துமடியும் நோயாளிகளை கௌரவத்தோடு இறப்பதற்கான ஒரு இடத்தை அன்னை 1963ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி நிறுவினார். இதற்கு 'இரக்க குணம் உள்ள இதயம்' என்று பெயரிடப்பட்டது.

உலகின் கவனத்தை ஒரு சேர ஈர்த்த இரண்டு பெண்மணிகளின் இழப்பை குறுகிய நாட்க ளுக்குள் உலகம் தாங்கிக் கொண்டது.

அன்னை தெரேசாவின் அன்பையும் ஆச்சரியத் தையும் ஒரு சேரப்பெற்றுக் கொண்ட வேல்ஸ் இளவரசி டயானா நான்கு தடவைகள் அன்

நெய்தல் நம்பி

னையை சந்தித்துள்ளார். டயானாவின் மறைவு குறித்து முதலில் அனுதாபம் தெரிவித்த பிரபல்ய மான உலகப் பெண்மணிகளில் அன்னையும் ஒரு வர்.

'இவர்களுக்கிடையே ஏற்பட்ட அந்நியோன்

(VII ஆம் பக்கம் பார்க்க)

## இவர் யார் தெரிகிறதா?



(VII ஆம் பக்கம் பார்க்க)

# டயானா மரணத்தின் பின்னர்... பத்திரிகை உலகின் புதிய சகாப்தம்



டயானாவின் மரணச் சடங்குகளின்போது அவரின் சகோதரனான ஏர்ல் ஸ்பென்சர் தகவல் தொடர்பு சாதனங்களை கடுமையாகத் தாக்கி யமை டயானாவின் அகால மரணத்தில் தமக்கும் பங்குண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ள பிரித் தானிய பத்திரிகைகளுக்கு ஒரு திருப்புமுனை யாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிரேஷ்ட தகவல் தொடர்பு சாதன அலுவலர்க ளும், பத்திரிகைகளின் ஆசிரியத்தலையங்க எழுத்தாளர்களும் டயானாவின் மரணத்தின் பின் னர் நிலைமை முன்னரைப்போல ஒருபோதுமே இருக்கமுடியாது என்பதை ஒப்புக்கொண்டுள் ளார்கள்.

டயானாவின் முன்னாள் கணவரான இளவரசர் சார்ள்ஸ் தங்களது இரண்டு புதல்வர்களும் புகைப்படக்கருவிகளின் இடையூறுகள் எதுவு மின்றி நிம்மதியாக வாழவிடப்படவேண்டும் என்று விடுத்த உருக்கமான வேண்டுகோளை அடுத்துப் பத்திரிகை உலகம் அதனை ஏற்றுப்

(VI ஆம் பக்கம் பார்க்க)

தமிழில் : ப. சிறீதேவன்

## நவீன யுகத்தில் வேட்டையாடப்பட்ட பெண்

இப்பத்திரிகை யுனைட்டெட் நியூஸ் பேப்பர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-15, எலிஹவுஸ் றோட், 68ஆம் இலக்கத்தில் 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.